


# இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)

## சுற்றுலா முதலீட்டுக்கு SLTDA இற்கு சொந்தமான காணிகளுக்கான

# ஆர்வ வெளிப்பாடு (EOI)

பேண்தகு சுற்றுலா முதலீடுகளுக்காக பிரதான காணித் துண்டுகளின் தொகுதி ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுடன் இணைந்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறது. ஆசியாவில் முன்னணி சுற்றுலாத் தலம் ஒன்றாக மாறும் இலங்கையின் நோக்கின் ஓர் அங்கமாக, தனியார் துறை மேம்பாட்டுக்கு பல்வேறு உயர் திறன் கொண்ட முக்கிய புவியியல் மற்றும் கருப்பொருள் அடிப்படையிலான சுற்றுலாவுக்கு இந்தக் காணிகளை வழங்க SLTDA முன்வந்துள்ளது.

கீழ் விபரிக்கப்பட்டுள்ள 3,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட இந்தக் காணிகள் நீண்ட கால (30 ஆண்டுகள்) குத்தகை அடிப்படையில் வழங்கப்படும்.

### கற்பிட்டி தீவு சுற்றுலா விடுதி

**1. பத்தலகுண்டுவ தீவு – சுமார் 291 ஏக்கர்கள்**

- அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகள்

  சுற்றுச்சூழல்/ இயற்கை/ சாகச சுற்றுலா, நீர் விளையாட்டுகள், பரிந்துரைக்கப்பட்ட இடங்களில் கடல் குளியல், கடற்கரை விளையாட்டு, உல்லாச பயணம், முகாமிடல் அல்லது சமூகத்துடன் கூட்டிணைந்து செயற்படும் ஏனைய பொருத்தமான செயற்பாடுகள்.

**2. உச்சமுனை தீவு – சுமார் 1,095 ஏக்கர்கள்**

- அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகள் - கடல் விமான துறைமுகம், படகு துறைமுகம் மற்றும் Marina உடன் ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுலா விடுதி ஒன்றுக்கு பொருந்தும். டைவிங் பயிற்சி நிலையத்துடன் டைவிங் சுற்றுலா விடுதி, சுற்றுச்சூழல்/ இயற்கை/ சாகச சுற்றுலா, நீர் விளையாட்டுகள், பரிந்துரைக்கப்பட்ட இடங்களில் கடல் குளியல், கடற்கரை விளையாட்டு, உல்லாச பயணம், முகாமிடல், விளையாட்டுகள் மற்றும் சுகாதார மையம் மற்றும் ஸ்பா, கொல்ப் மைதானம், driving range மற்றும் குதிரையோட்ட கல்லூரி உட்பட விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் சமூகத்துடன் கூட்டிணைந்து செயற்படும் ஏனைய பொருத்தமான செயற்பாடுகள் முக்கியமாக விரும்பத்தக்கவை.

இரு தீவுகளுக்கும்

- அறை அடர்த்தி: ஹெக்டாயர் ஒன்றுக்கு 25 அறைகள்
- அதிகபட்ச கட்டிட அடித்தளம் 25%
- உள் நிலப்பகுதியுடன் சேர்த்து G+3 (அதிகபட்சம் 15மீ. உயரம்), கடற்கரையை முகப்பாகக் கொண்ட கட்டிட கட்டமைப்புக்காக பரிந்துரைக்கப்பட்ட உயரம் ஒற்றை மாடி

### தேதுவ ஏரி சுற்றுலா விடுதி பகுதி

- சுமார் 1,713 ஏக்கர் காணி
- தங்குமிடம், சாகசம், ஆரோக்கியம் மற்றும் ஓய்வு நடவடிக்கைகளை ஒன்றிணைத்த திறனுடன் ஒருங்கிணைந்த ஓய்வு விடுதித் திட்டம் ஒன்றுக்கு பொருந்தும்.
- பொருந்துகின்ற வகையில் நீர்வழி பாதுகாப்பு மற்றும் நிலப் பகுதியின் அதிகபட்சம் 50% கட்டிடப் பரப்பளவு
- G+2 (முகட்டுக்கு 12 மீ.) கட்டிட உயர வரம்பு
- பெரும்பாலான காணித் துண்டுகள் நீரை முகப்பாக கொண்டுள்ளன, மரங்கள் மற்றும் வயல்கள் அல்லது கைவிடப்பட்ட நெல் வயல்களின் காடுகள் நிறைந்த நிலப்பரப்புடைய இயற்கையுடனான கருப்பொருளை முழுமையாக ஏற்றல் வேண்டும்.
- இந்தத் திட்டம் இயற்கையுடன் பொருந்தி இருத்தல் வேண்டும் என்பதோடு சமூகத்துடன் கூட்டிணையும் திறனை கொண்டிருத்தல் வேண்டும்.

### பென்தொட்ட தேசிய விடுமுறை விடுதி

- 1 தொடக்கம் 3 ஏக்கர்கள் மூலோபாய ரீதியில் அமைந்துள்ள பல காணித் துண்டுகளின் தோராயமான 24 ஏக்கர்கள்
- சுற்றுலா விடுதியை மேம்படுத்தல் மற்றும் கலாசார சுற்றுலாவுக்கு பொருத்தமானது.
- கட்ட முடியுமான அதிகபட்ச பகுதி 30%.
- கடற்கரை முகப்பு நிலங்களுக்கான கூரைகள், தொட்டிகள் மற்றும் கோபுரங்கள் உட்பட அதிகபட்ச கட்டிட உயரம்: 14மீ. (தரை + 2 மாடி)
- புதிய கடற்கரை பாதுகாப்பு முகாமைத்துவ திட்டத்தை பின்பற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பேண்தகு நிலையை கருத்தில் கொள்வது அவசியம்.

### குச்சவெளி கடற்கரை விடுதி

- 3 – 10 ஏக்கர்கள் அளவில் பல காணிகளின் தோராயமாக 74 ஏக்கர்கள்.
- சுற்றுச்சூழல் மற்றும் Boutique வில்லா, கடற்கரை முகப்பு சுற்றுலா ஹோட்டல்கள், நீர் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகள் அல்லது காடு சார்ந்த கடற்கரை விடுதிகளுக்கு பொருந்தும்.
- கட்ட முடியுமான அதிகபட்ச பகுதி 30%.
- தளத்தில் உள்ள நடுத்தர அளவான மரங்களுக்கு மேல் உயரக் கூடாது – தளத்தில் இருந்து கூரையின் உச்சிமுனை வரை தோராயமாக 18 அடி (ஒற்றை மாடி) மற்றும் 28 அடி (இரண்டு மாடிகள்).

### பாசிக்குடா தேசிய விடுமுறை விடுதி

- விரைவாக மேம்பட்டு வரும் சுற்றுலா விடுதிப் பகுதி ஒன்றில் அமைந்துள்ள கடற்கரை முகப்பாக உள்ள 6.5 ஏக்கர் காணி
- சுற்றுச்சூழலுக்கு சாதகமான வடிவமைப்புகளுடன் உயர் தர நட்சத்திர ஹோட்டல் ஒன்றுக்கு பொருத்தமானது.
- கட்ட முடியுமான அதிகபட்ச பகுதி 30%.
- கூரைகள், தொட்டிகள் மற்றும் கோபுரங்கள் உட்பட அதிகபட்ச கட்டிட உயரம்: 15மீ. (தரை + 3 மாடி)

### ரசூல் தோட்டம், திருகோணமலை

- 2 – 5 ஏக்கர்கள் அளவில் பல காணிகளின் தோராயமாக 40 ஏக்கர்கள்.
- சுற்றுச்சூழலுக்கு சாதகமான வடிவங்களுடன் பசுமை சுற்றுலா அடிப்படையில் சாகச – கலாசார அனுபவத்திற்கு பொருத்தமானது.
- கட்ட முடியுமான அதிகபட்ச பகுதி 30%.
- கூரைகள், தொட்டிகள் மற்றும் கோபுரங்கள் உட்பட அதிகபட்ச கட்டிட உயரம்: 12மீ. (தரை + 2 மாடி)

### புலனயாய, பீதுரங்கல

- ஒரே முதலீட்டாளர் ஒருவருக்கான 17 ஏக்கர் காணித் துண்டு.
- சுற்றுச்சூழலுக்கு சாதகமான வடிவமைப்புகளுடன் இயற்கை மற்றும் கலாசார அடிப்படையிலான சுற்றுலாவுக்கு அதிக வாய்ப்பு.
- சீகிரிய மற்றும் பிதுரங்கல பாறைகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
- கட்ட முடியுமான அதிகபட்ச பகுதி 30%.
- அதிகபட்ச கட்டிட உயரம்: 10மீ. (தரை + 1 மாடி)

### அல்லாஸ் தோட்டம், திருகோணமலை

- 1 – 2 ஏக்கர்கள் அளவில் பல காணிகளின் தோராயமாக 4 ஏக்கர்கள்.
- நகர்புற சுற்றுலா விடுதிகள் அல்லது Boutique வகை விருந்தினர் இல்லங்களுக்கு நன்கு பொருத்தமானது.
- தற்போதுள்ள பகுதிகளின் அம்சங்களுக்கு ஏற்ப சுற்றுச்சூழலுக்கு சாதகமான கட்டிடம்.

### முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்:

ஆர்வமுடைய தரப்புகள் ஆரம்ப கருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம் என்பதோடு தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்கள் விரிவான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்படும்.

- பதிவுத் தபால் அல்லது கைகளால் சேர்ப்பதன் மூலம் பின்வரும் முகவரிக்கு (இரு பிரதிகளில்) முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவும்:

  **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு**
  **இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை**
  **இல. 80, காலி வீதி, கொழும்பு 03**
- இந்த விளம்பரத் திகதியில் இருந்து 45 நாட்களுக்குள் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "EOI – சுற்றுலா மேம்பாடு – காணியின் முன்மொழியப்பட்ட இடம்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
- பல்வேறு இடங்களுக்காக விண்ணப்பிப்பதாயின், வெவ்வேறு விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
- திணைக்கள பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
- மேலதிக விபரங்களுக்கு பிரவேசிக்கவும்: **www.sltda.gov.lk**

### முன்மொழிவு மதிப்பீட்டு அளவுகோல்:

- உலகத் தரம் வாய்ந்த சுற்றுலா தயாரிப்புகளுடன் படைப்பாற்றல் மற்றும் ஒப்பீடு.
- சுற்றுச்சூழல் திறன் மற்றும் பேண்தகு நிலை (புதுப்பிக்கத்தக்க ஆற்றல், நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு முகாமைத்துவம்)
- கருத்திட்டத்தின் தனித்துவம் மற்றும் சிறந்த சுற்றுச்சூழல் நடைமுறைகளை பின்பற்றுதல்.
- உயர்நிலை சுற்றுலாவின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டத்தின் திறன்.
- திட்டமிடப்பட்ட வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் சமூக நன்மைகள்
- முதலீட்டின் அளவு மற்றும் நிதி மற்றும் சந்தைப்படுத்தல் திறன்களை நிரூபித்தல். (மொத்த முதலீடு, முதலீட்டில் உள்ள வருவாய் (ROI), மற்றும் இலங்கையில் வர்த்தக நாமத்தின் தரத்திற்கான ஆதரவு)
- நிறுவனத்தின் சுயவிபரம் மற்றும் இதனையொத்த திட்டங்களின் அனுபவம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல. 80, காலி வீதி, கொழும்பு – 03.**